**ABSTRACT**

Schemes – Namakku Naame Thittam Guidelines for the implementation of the Scheme for the year 2010-2011 - Orders issued.

---

Rural Development and Panchayat Raj (SGS1) Department

G.O. (1D)No. 240 Dated:18.5.2010

Read:

1. G.O. (Ms) No.62, Rural Development and Panchayat Raj Department, dated 16.7.2009.
2. From the Commissioner of Rural Development and Panchayat Raj Letter No.24905/09/NEDM-2 dated 4.5.2010.

\- - - - - -

ORDER:

In the Government Order first read above, orders have been issued for the implementation of 'Namakku Naame Thittam' for the year 2009-10. In the letter second read above, the Commissioner of Rural Development and Panchayat Raj has sent detailed guidelines for the implementation of the "Namakku Naame Thittam" during 2010-2011 and requested the Government for issue of order.

2) This is an ongoing scheme and a sum of Rs.50 crores have been provided in the BE 2010-11 for this scheme. The Government have carefully examined the detailed guidelines sent by the Commissioner of Rural Development and Panchayat Raj and decided to accept them. Accordingly, the Government direct that the detailed guidelines for the implementation of "Namakku Naame Thittam" during 2010-2011 as given in the annexure to this Government Order and these guidelines come into force with immediate effect.

3) This order issues with the concurrence of Finance Department Vide its U.O. No.272/Secy(P)/10, dated 07.05.2010.

(By Order of the Governor)

K.ASHOK VARDHAN SHETTY
Principal Secretary to Government.

To
The Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai -15.
The Commissioner of Rural Development and Panchayat Raj, (Training) Chennai -15.
All District Collectors (except Chennai).

Commissioner, Corporation of Chennai, Chennai-3.
Commissioner, Municipal Administration, Chepauk, Chennai – 5.
Director, SIRD, Mariaimalainagar, Kancheepuram District.
Commissioner, Town Panchayat, Chennai – 108.
All Secretariat Departments, Chennai – 9.
The Principal Accountant General, Chennai -6/18/35.
Pay and Accounts Officer, Chennai – 35.
Pay and Accounts Officer, Madurai,
All Treasury Officers,
Finance (Rural Development ) Department, Chennai – 9.
Finance (Budget Gen-1/Budget Gen-II/Finance(W&M-1)
Finance (Salaries) Department, Chennai – 9.
Planning, Development and Special Initiatives Department, Chennai – 9.

Copy to :
Personal Assistant to Chief Secretary, Chennai – 9.
The Secretary to Hon'ble Chief Minister, Chennai – 9.
The Senior Personal Assistant to Hon'ble Deputy Chief Minister, Chennai – 9.
Secretary, Municipal Administration and Water Supply Department, Chennai – 9.
All Personal Assistants to Hon'ble Ministers, Chennai – 9.
SF / SC

// Forwarded by Order //

SECTION OFFICER

G.O. (1D) No. 240, RD & PR (SGS1) Department, Dated 18.05.2010.

**ANNEXURE**

# GUIDELINES FOR IMPLEMENTATION OF NAMAKKU NAAME THITTAM 2010-2011

1. Namakku Naame Thittam will be implemented both in rural and urban areas.

**2. SUGGESTED LIST OF WORKS THAT MAY BE TAKEN UP:**

The following works may be taken up under Namakku Naame Thittam 2010-2011.

i) Construction of buildings, laboratories, toilets and compound walls/fencing to Government, Adi Dravida, Panchayat Union and Kallar Reclamation Schools, Government Colleges and Government Hostels.

ii) Construction of buildings, Compound walls and fencing to Government Hospitals, Primary Health Centres, Sub-centres, Veterinary Dispensaries, Livestock Centres and libraries.

iii) Construction of libraries in urban areas, Noon Meal Centres, Kitchen sheds, Anganwadies and Public Distribution Shops in rural and urban areas.

iv) Creation of community assets like Drinking water sources, Cement concrete roads and Threshing floors in rural and urban areas.

v) Maintenance of all community assets (including white washing, painting etc.).

vi) Construction of bridges, culverts, upgradation of gravel/WBM roads to BT standard, renewal of worn out BT roads, improvement of streets and lanes with brick or metal stones or cement slabs or cement concrete.

vii) Formation, improvement and maintenance of Parks, Play grounds, Traffic Islands, Fountains, Street lights.

viii) Purchase of Furniture, Computers and accessories for Government and Panchayat Union Schools, Libraries and buildings for the use of the public. Old Computers and accessories should not be purchased. Books used in Libraries may be got as donation.

ix) Construction of class rooms, laboratories and toilets in 100% Government-aided and 100% Tamil medium schools.

**3. NEGATIVE LIST/PROHIBITED WORKS:**

The following works under the **'negative list'** (prohibited works) cannot be taken up under the NNT unless specifically included in the exceptions:

1) Construction of office and residential buildings belonging to Central and State Governments, including Public Sector Undertakings, Co-operatives and Societies.

   **Exception:** Construction of buildings, compound walls for all types of Government hospitals, Primary Health Centres and Government Veterinary Hospitals; Construction of Public Distribution Shops, Direct Procurement Centres, Milk Producers' Co-operative Societies and Bulk Chilling Centres can however be taken up.

2) Purchase of all movable items, equipments and furniture.

   **Exception:** Purchase of furniture and equipments for Government Schools, Panchayat Union Schools, Adi Dravida Schools, Kallar Reclamation Schools; Noon Meal Centres, Anganwadis, Government Colleges, Government Hostels; Government Hospitals, Primary Health Centres and Government Veterinary Hospitals is permitted.

3) Any work in Government-aided and Self-financing Schools and Colleges. **Exception:** Construction of class rooms, laboratories and toilets in 100% Government aided and 100% Tamil medium schools can be taken up. If the School is partly Self-financed and partly aided or if it is partly Tamil Medium and partly English Medium, it is not eligible. The assistance by way of Government Grant under this Scheme to an eligible aided school should not exceed Rs.10 lakhs in a particular year. Once a Government aided School eligible as above has been assisted, irrespective of the amount assisted, it shall be ineligible for further assistance under this scheme for a period of 3 years.

   For such cases, apart from Collector making his own enquires, the following certificates should be obtained from the District Elementary Education Officer or Chief Educational Officer of the district concerned before undertaking the works.

   (i) The school has 100% Tamil medium Classes/Sections**.** There are no English Medium Sections.

   (ii) The School is 100% Government aided School. No self-financing course / classes are run in the above school in the same campus or different campuses under the same management.

4) All works involving commercial establishments/units.

5) Grants and loans, contribution to any Central and State/UT Relief Funds.

6) Acquisition of land or any compensation for land acquired.

7) Reimbursement of any type of completed or partly completed works or items.

8) Assets for individual/family benefits.

9) All revenue and recurring expenditure.

10) Works within the places of religious worship and on land belonging to or owned by religious faiths /groups.

11) Desilting of ponds, Ooranies, rivers, tanks, canals, channels and the like.

12) Gravel / WBM roads (roads up to BT standard only should be taken up).

13) Installation of High Mast Lights

**4. CONDITIONS STIPULATED:**

The suggested list of permissible works may be taken up subject to the following conditions:

a) No permanent structure should be constructed without prior permission of the owner of the property.

b) No rights can be claimed by the contributing person/entity over the property/ use of property.

c) The names of the contributors who execute the work may be put in the name board at the place of execution of the work with the permission of the District Collector. The name of the scheme 'Namakku Naame Thittam' should be displayed in not less than two-thirds of the size of the name board. The name board may be permitted to be put up by the contributors in such a manner that it does not affect the aesthetic value of the site and the contributors do not claim any right or lease over the property.

d) If the Collector feels that the contributors have not shown any interest on the work or that some conditions have been violated, the order issued for execution or maintenance of the work shall be cancelled or permission shall not be given for continuing the work.

**5. Procedure for selection of works under Namakku Naame Thittam:**

i) The need for taking up of works under Namakku Naame Thittam may originate from individuals, groups, institutions, companies or from the community.

ii) After identification of the work to be executed, an application specifying the nature of work, acceptance letter for contributing one-third of the amount by means of Demand Draft should be given to the District Collector or Project Director, District Rural Development Agency.

iii) The contributions given by the local bodies, Universities and Public Sector Undertakings shall not be accepted under this Scheme.

iv) The District Collector will ascertain the actual need and feasibility of the work to be taken up.

v) If permission of the local body or the Department concerned is necessary to execute the work, the Collector shall obtain the permission before according administrative sanction.

vi) If the assets to be created have to be maintained by the local bodies or the department concerned, the District Collector should obtain concurrence from the department concerned.

vii) If requests are received for various works for a limited amount available under the Scheme, the District Collector shall give priority for the works which are of maximum benefit to the community.

**6. Execution of works:**

i) Administrative sanction should be accorded only after preparation of the estimate by the local bodies or the department concerned as per the schedule of rate approved by the competent authority or as per the latest schedule of rate of the Public Works Department. A minimum of one-third of the estimated cost of the work should be received by means of Demand Draft in favour of the "District Collector to Namakku Namme Thittam Account". The balance amount will be released by Government from the Namakku Namme Thittam fund. Further, if the guidelines of other schemes of the Centre and the State are in tune with this Scheme, the funds of those schemes may also be dovetailed with the public contribution.

ii) To facilitate larger participation of the people in this scheme, if the public or contributors opt to execute the work themselves or through their agency, willingness should be given by them in writing while applying for

the work under Namakku Namme Thittam. The District Collector will examine the request and permit the contributors or the agency to execute the work if the public contribution is 50% or more of the estimate of the work.

iii) If the agency/institution does not come forward to execute the work, the work shall be implemented through tender as per the provisions of the Tamil Nadu Transparency in Tenders Act, 1998.

iv) The District Collector will decide the Technical Authority for supervision of the work. The agency may be the local body or the department concerned. The District Collector will release the funds required to the Agency concerned.

v) (a) The work order will be issued to the local body / Line Department / Contributor / private institutions or the person from any one of the above agencies executing the work.

(b) Even though the works are executed by the private bodies/Associations or the Public, the funds will be at the disposal of the local body/ Department concerned supervising the work.

(c) The bills will be sanctioned as per the measurement and check measurement by the competent Technical Authority and as per the guidelines for payment for works under other Government Schemes.

(d) In case of school buildings including the High School / Higher Secondary Schools, in addition to the supervision as above, the Public Works Department or the Corporation or Municipality or the Technical wing of the executing Department should issue the structural stability certificate. The technical wing shall prepare the completion report for the building work.

vi) In respect of works taken up with 100% public contribution, if the beneficiary association/contributors concerned express willingness to execute the work themselves, work can be entrusted to them without insisting on the advance cash contribution under Namakku Naame Thittam. However, the work should be executed as per the type design and stability aspects of the building, subject to the measurements of the works.

**7. Maintenance of assets created under NNT**

It is preferable that the local body or the contributor concerned on behalf of the Department themselves maintain the works / assets created under Namakku Naame Thittam. In order to continuously maintain the assets created under this scheme, the local people should form a user group run on self generated resources. The local people should be encouraged to plan, execute and maintain the works based on local needs.

**8. Release of Funds:**

i) Out of the total amount of Rs.50 Crores, 25% of the amount will be retained at the Directorate of Rural Development and Panchayat Raj for sanction of special schemes by Commissioner of Rural Development and Panchayat Raj. The Commissioner of Rural Development and Panchayat Raj should release the balance amount in two instalments to the districts as per population, and the Collectors should release the funds to rural and urban areas on priority basis of works from the funds released to the districts.

ii) a) If additional funds are required by the Districts to take up special schemes under Namakku Namme Thittam, proposals for such schemes should be sent to the Commissioner of Rural Development and Panchayat Raj. Before sending proposals for additional funds and funds for special schemes from the Commissioner of Rural Development and Panchayat Raj, the entire amount already allotted to the District should have been utilized.

b) If required, the Commissioner of Rural Development and Panchayat Raj will, in consultation with the Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, re-allot the unutilized funds available with the Districts as on 28th February to districts with better performance and requiring additional funds for implementation of works.

iii) a) The funds received from Government and the Public will be deposited in a Savings Bank Account opened for Namakku Naame Thittam Scheme.

b) All contributions received by the District Collectors should be by means of Demand Draft in the name of “District Collector’s Namakku Naame Thittam Account”. Receipt should be given for all contributions received.

c) A register should be maintained for the contributions received in cash. The accounts and the register should be maintained by the Project Director, District Rural Development Agency.

d) The District Collector shall release 75% of the funds including the public contribution to the local body/ line department concerned, along with Administrative Sanction. The remaining amount will be released only after receipt of utilization certificate.

iv) In case of the work proposed not being taken up for certain reasons, the District Collector will order refund of the entire amount or part amount in accordance with the quantum and value of the work undertaken. In such cases, the contribution amount will be refunded to the contributor in full or part without any interest.

**9. Information, Education and Communication:**

The District Collector should take steps for communication and publicity of the salient features and success stories of Namakku Naame Thittam through the local newspapers and electronic media. The District Collectors may utilize one percent of the allocation under this scheme for IEC activities and documentation.

**10. Chennai Corporation:**

As regards, the Corporation of Chennai, the Commissioner of Chennai Corporation will execute all the works under Namakku Naame Thittam on behalf of Collector, Chennai. Accordingly the Commissioner of Chennai Corporation will accord administrative sanction for the works.

**11.** The Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department is empowered to modify the guidelines of Namakku Naame Thittam, whenever necessary, in consultation with the Commissioner of Rural Development and Panchayat Raj.

K. ASHOK VARDHAN SHETTY
Principal Secretary to Government.

//True Copy//

Section Officer.

**சுருக்கம்**

நமக்கு நாமே திட்டம் – **2010–11**ம் ஆண்டு “நமக்கு நாமே திட்டம்” – செயல்படுத்துவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசு ஆணை (1டி) எண். 240 நாள்: 18.5.2010

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.62, ஊ.வ.(ம)ஊ.துறை, நாள் 16.07.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் எண்.24905/09/என்.இ.டி.எம்.2, நாள் 4.5.2010.

* * * * *

ஆணை:

படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையில் “நமக்கு நாமே திட்டத்தினை” 2009-10ம் ஆண்டில் செயல்படுத்துவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. படிக்கப்பட்டவை இரண்டில் காணும் கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் 2010–2011ம் ஆண்டில் “நமக்கு நாமே திட்டத்தினை” செயல்படுத்துவதற்குறிய வழிகாட்டு நெறி முறைகளை அனுப்பி அதற்கு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2) “நமக்கு நாமே திட்டம்” ஒரு நடைமுறையிலுள்ள திட்டமாகும் (ongoing Scheme). இத்திட்டத்திற்கு 2010–11ஆம் ஆண்டிற்கு ரூ.50 கோடியை அரசு வரவு செலவு திட்டதில் ஒதுக்கீடு செய்துள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் பரிந்துரை செய்துள்ள “நமக்கு நாமே திட்ட” வழிகாட்டு நெறிமுறைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்து, அவற்றை ஏற்று அதன்படி 2010–2011ஆம் ஆண்டில் “நமக்கு நாமே திட்டம்” சிறப்பாக செயல்படுவதற்கு கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு உடனடியாக அமுல்படுத்த இதன் வழி அரசு ஆணையிடுகிறது.

3) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண். 272/Secy(P)/10, நாள் 07.05.2010-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர், சென்னை – 15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், (பயிற்சி) சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி, பயிற்சி நிறுவனம்,
மறைமலைநகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
பேரூராட்சிகள் ஆணையரகம், சென்னை – 108.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 9.
மாநில தலைமை கணக்காயர், சென்னை –6/18/35.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை – 35.
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
செயலாளர், தகவல் தொகுப்பு மையம், சென்னை – 32.
நிதி (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை – 9.
நிதி (வரவு–செலவு பொது–1/வரவு–செலவு பொது–2/
நிதி (வழி வகை 1) / நிதி (சம்பளங்கள்) துறை, சென்னை –9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.

<u>நகல்:</u>
தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
அனைத்து அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள், சென்னை – 9.
இ.கோ/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## அரசு ஆணை (1டி) எண். 240, ஊ.வ(ம)ஊ. துறை, நாள் 18.5.2010.

## இணைப்பு

## 2010–11 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1. நமக்கு நாமே திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

2. **மேற்கொள்ளப்பட வேண்டிய பரிந்துரைக்கப்பட்ட பணிகள்**
   நமக்கு நாமே திட்டம் 2010–11ல் கீழ்க்கண்ட பணிகளை எடுத்துச் செய்யலாம்.

   i) அரசு, ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டிடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச் சுவர்/சுற்று வேலி அமைத்தல்.

   ii) அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால் நடை மருந்தகங்கள், கால் நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச் சுவர்/சுற்று வேலி அமைத்தல்.

   iii) நகர்ப்புற பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் சத்துணவு மையங்கள், சத்துணவு மைய சமையல் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பொது விநியோகக் கடைகள் ஆகியவைகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்

   iv) கிராமம் மற்றும் நகரங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல், சிமெண்ட் காங்கிரீட் சாலைகள் மற்றும் நெற்களங்கள் போன்ற சமுதாய சொத்துக்களை உருவாக்குதல்

   v) அனைத்து சமூக சொத்துக்களையும் பராமரித்தல் (சுவர்களுக்கு சுண்ணாம்பு அடித்தல், பெயிண்ட் அடித்தல் போன்றவை உட்பட)

   vi) பாலங்கள் அல்லது சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை/ கப்பிச் சாலைகளை தார் சாலைகளாக தரம் உயர்த்துதல், தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் சிலாப்பு அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.

   vii) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island) நீரூற்று, தெருவிளக்குகள் போன்றவற்றை அமைத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தி பராமரித்தல்.

   viii) பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் உள்ளாட்சி மன்ற பள்ளிகள் நூலகங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு தேவையான அறைகலன்கள் (பர்னிச்சர்) கம்ப்யூட்டர்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல்.

பழைய கம்ப்யூட்டர்கள், உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கக்கூடாது. எனினும் நூலகங்களில் பயன்படுத்தப்பட்ட புத்தகங்களை தானமாக பெறலாம்.

ix) 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல்.

## 3. தடைசெய்யப்பட்ட பணிகள்

விதிவிலக்காக அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் **‘தடை செய்யப்பட்ட பணிகளை’நமக்கு நாமே திட்டத்தில்** எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

   **விதிவிலக்கு –** அனைத்து அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டிடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்கு கட்டிடம் கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டிடங்கள், மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

2. அசையும் பொருட்களான உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் வாங்குதல்.

   **விதிவிலக்கு –** அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், சத்துணவு மையங்கள், அங்கன்வாடிகள், அரசுக்கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

3. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

   **விதிவிலக்கு – 100** சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் **100** சதவீதம் தமிழ் வழிக் கல்விப் பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். பகுதி சுய நிதி பெறும் மற்றும் பகுதி நிதி உதவிப் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி அல்லது பகுதி ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகள் நமக்கு நாமே திட்டத்தில் அரசு நிதி உதவி பெற தகுதியில்லை. நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்கு நமக்கு நாமே திட்டத்தில் அரசு மான்யம் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ.10.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று நமக்கு நாமே திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி இத்திட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளுக்கு மேலும் உதவி பெற தகுதியில்லை. மேற்படிப் பணிகளை பொருத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் தனது சொந்த விசாரணையை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் சான்றிதழ்களை பணி மேற்கொள்வதற்கு முன் பெறப்பட வேண்டும்.

i) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள் / பிரிவுகள் கொண்டது. இந்தப் பள்ளியில் ஆங்கில வழி பிரிவுகள் ஏதும் இல்லை.

ii) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியில் சுய நிதி பிரிவுகள் / வகுப்புகள் இயங்கவில்லை.

4. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.

5. மானியம் மற்றும் கடன், மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

6. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

7. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

8. தனிநபர்/ குடும்ப பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

9. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

10. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

11. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

12. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

13. உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்.

**4) வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள்**

அனுமதிக்கப்படக் கூடிய பணிகளை கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளலாம்.

அ) சொத்தின் உரிமைதாரரின் முன்அனுமதி பெறாமல் எந்த நிரந்தர கட்டுமான பணியும் செய்யக்கூடாது.

ஆ) பணிக்கான பங்களிப்பை அளிக்க முன்வரும் நபர்/நிறுவனம் ( contributing person/ entity) சொத்திலோ அல்லது அதன் பயன்பாட்டிலோ (Property/use of property) எந்த உரிமையும் கோரக்கூடாது.

இ) பணிக்காக பங்களிப்பு நிதி வழங்கியவர்களின் பெயர்களை, மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் அனுமதி பெற்று, பணி நடைபெறும் இடத்தில் விளம்பரப் பலகை வைக்கலாம். விளம்பரப் பலகையில் குறைந்தது மூன்றில் இரண்டு பகுதி பரப்பில் ‘நமக்கு நாமே திட்டம்’ என்பது தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பணிசெய்யும் இடத்தின் மதிப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையிலும், திட்ட பணிக்காக பங்களித்தோர் சொத்துக்கு உரிமையோ அல்லது குத்தகை உரிமையோ, கோர வாய்ப்பு அளிக்காத வகையில், அந்நிறுவனம் விளம்பரம் செய்யஅனுமதிக்கலாம்.

ஈ) திட்டப் பணிக்கு பங்களித்தோர் போதுமான அக்கறை காட்டவில்லை அல்லது ஏதாவது நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் கருதினால், பணியைச் செய்யவும், பராமரிக்கவும் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படும் அல்லது பணியை தொடர அனுமதிக்கப்படமாட்டாது.

**5) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்**

i) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை குறித்த கருத்து தனி நபர், குழு, நிறுவனங்கள், கம்பெனிகள் அல்லது சமுதாய மக்கள் மூலமாக உருவாகலாம்.

ii) செய்ய வேண்டிய பணியை கண்டறிந்தபின், பணியின் தன்மையை குறிப்பிட்டு விண்ணப்பமும், மூன்றில் ஒரு பங்கு தொகையை வங்கி வரைவாக வழங்கவும் சம்மதம் தெரிவித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனரிடமோ கொடுக்க வேண்டும்.

iii) உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் அல்லது அரசுத்துறை நிறுவனங்கள் வழங்கும் நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iv) மாவட்ட ஆட்சித் தலைவர், மேற்கொள்ளப்பட உள்ள பணியின் உண்மையான தேவை மற்றும் செயல்படுத்தக்கூடிய வாய்ப்பு குறித்து கேட்டு அறிந்து கொள்வார்.

v) பணிகளை செய்வதற்கு உள்ளாட்சி மன்றம் அல்லது அப்பணி சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனின் அவற்றின் அனுமதியை, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவர் பெறவேண்டும்.

vi) உருவாக்கப்படும் சொத்துக்கள் உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்க வேண்டியிருப்பின், அச்சொத்துக்களை உருவாக்க அந்த துறைகளின் ஒத்திசைவினை மாவட்ட ஆட்சித் தலைவர் பெறவேண்டும்.

vii) குறிப்பிட்ட அளவுள்ள தொகைக்குள், பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள் மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளைக் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**6. பணிகளை நிறைவேற்றுதல்.**

i) அரசின் உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பொதுபணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட பணிகளுக்கான தற்போதைய விலைப்பட்டியலின்படி உள்ளாட்சி நிறுவனங்கள் அல்லது சம்பந்தப்பட்ட துறையால் பணிகளின் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னரே, நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு தொகை வங்கி வரைவு ‘‘மாவட்ட ஆட்சியரின் “நமக்கு நாமே திட்டம் நிதி’’ என்ற பெயரில் பெறப்பட வேண்டும். மீதமுள்ள தொகை, அரசு ஒதுக்கீடு செய்யும் நமக்கு நாமே திட்ட நிதியிலிருந்து அளிக்கப்படும். மேலும், மத்திய அல்லது மாநில அரசின் வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள் இத்திட்டத்திற்கு இசைவாக இருந்தால், அத்திட்டங்களின் நிதியும், பொது மக்களின் பங்களிப்புக்கு இணையாக சேர்த்துக்கொள்ளப்படும்.

ii) மக்கள் இத்திட்டத்தில் பெரிய அளவில் பங்கேற்க ஏதுவாக, பொது மக்களோ அல்லது பணிக்கான பங்களிப்பை அளித்தவரோ, மேற்கண்ட பணியை தாங்களாகவோ அல்லது வேறு முகவர்கள் மூலமாக செய்திட விரும்பினால், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யும் போது எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த கோரிக்கையை ஆய்வு செய்து, அப்பணியின் மதிப்பீட்டில் பொதுமக்களின் பங்களிப்பு 50 சதவீதம் அல்லது அதற்குமேல் இருந்தால், பங்களித்தவரையோ அல்லது அதன் முகவரையோ, அப்பணியை செயல்படுத்த அனுமதி வழங்குவார்.

iii) பணிக்கான பொதுப்பங்களிப்பை அளித்தவர்/நிறுவனம் தானே பணியை நிறைவேற்ற முன்வரவில்லை என்றால், அப்பணிகள், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

iv) பணிகள் தொழில்நுட்ப அடிப்படையில் மேற்பார்வையிடுவதற்கான முகவர் யார் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார். சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனமோ அல்லது இது தொடர்புடைய துறையோ, முகவராக இருக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் தேவைப்படும் நிதியை இம்முகமைக்கு விடுவிப்பார்.

v) அ) உள்ளாட்சி மன்றமோ / தொடர்புடைய துறையோ (Line Department) / நிதிவழங்கியவரோ/தனியார் நிறுவனங்களோ அல்லது மேற்கூறிய நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியை மேற்கொள்வோருக்கு பணி நிறைவேற்றல் ஆணை வழங்கப்படும்.

ஆ) பணிகளை நிறைவேற்றுவது தனியார் நிறுவனங்களோ/ சங்கங்களோ/ பொது மக்களாகவோ இருந்தாலும், இப்பணியை கண்காணிக்கும் முகவர்களான உள்ளாட்சி மன்றங்கள்/தொடர்புடைய துறையிடம் மட்டுமே இதற்கான நிதி இருக்கும்.

இ) பணி செய்யப்பட்ட அளவு குறித்து சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப பிரிவுகளால் சரிபார்க்கப்பட்டு, மற்ற அரசு திட்டங்களில் பணி செய்யப்பட்டதற்கு தொகை வழங்கப்படும் வழிமுறைகளின்படியே இத்திட்டத்தின் கீழும் பட்டியல்கள் அனுமதிக்கப்படும்.

ஈ) உயர்நிலை பள்ளி/மேல் நிலைப்பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரை மேற்கண்ட கண்காணிப்புத் தவிர, சம்பந்தப்பட்ட பொதுப் பணித்துறை அல்லது நகராட்சி அல்லது மாநகராட்சிகள் ஆகியன கட்டிடத்திற்கான உறுதித் தன்மை குறித்து சான்றிதழ் வழங்க வேண்டும். கட்டிடப்பணி நிறைவு பெற்றதற்கான பணிநிறைவு அறிக்கையை தொழில்நுட்பக் குழு தயார் செய்யவேண்டும்.

vi) 100 விழுக்காடு மக்கள் பங்களிப்புடன் பணியை மேற்கொள்ளும் இனங்களில் சம்பந்தப்பட்ட பயனாளி சங்கம்/பங்களிப்பு அளித்தவர்கள் தாங்களே பணியை நிறைவேற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தால், நமக்கு நாமே திட்டத்தின்படி செலுத்த வேண்டிய முன்பண பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டி வலியுறுத்தாமல் பணியை நிறைவேற்ற அவர்களிடம் ஒப்படைக்கலாம். எனினும் மேற்கண்ட பணிகள், அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அமைப்பு மற்றும் கட்டிட உறுதித் தன்மைகள் உட்பட வழக்கமான பணி நிறைவேற்றப்பெற்றதற்கான அளவுகள் சரிபார்க்கப்படுவதற்கு உட்பட்டு மேற்கொள்ளப்படவேண்டும்.

## 7. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை பராமரித்தல்

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணிகளை/சொத்துக்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் அல்லது சம்பந்தப்பட்ட துறை சார்பாக பணிக்கான பங்களிப்பை வழங்கியோரே பராமரித்து வருவது மிகவும் விரும்பத்தக்கது ஆகும். எனவே சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் உதவியுடன் இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களை தொடர்ந்து பராமரித்து வருவதற்காக சுயமாக நிதிபெற்று செயல்படும் ஒரு பயனாளிகள் குழுவை உள்ளூர் மக்கள் அமைக்க வேண்டும். உள்ளூர் தேவைக்கேற்ப திட்டமிட்டு, பணிகளை செயல்படுத்தி, பின்னர் பராமரித்து வருவதற்கு உள்ளூர் மக்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

## 8. நிதி விடுவித்தல்

i) நமக்கு நாமே திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூ.50 கோடியில் 25 சதவீத நிதியை சிறப்புத் திட்டங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஒப்பளிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் நிறுத்தி வைக்கப்படும். எஞ்சியுள்ள தொகையை மக்கள் தொகை அடிப்படையில் இரண்டு தவணைகளில் மாவட்டங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் விடுவிக்க வேண்டும். மேலும், மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊரக மற்றும் நகரப்புறங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

ii) அ) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிறப்பு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாவட்டத்திற்கு கூடுதல் நிதி தேவைப்படின், அத்தகைய திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். கூடுதல் நிதி மற்றும் சிறப்பு திட்டங்களுக்கான நிதியை ஆணையரிடம் கோரும் முன், மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை முதலில் முழுமையாக செலவு செய்திருக்க வேண்டும்.

ஆ) தேவைப்படின், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளருடன் கலந்து ஆலோசித்து பிப்ரவரி 28ஆம் தேதி அன்று உள்ள நிலவரப்படி, மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் உள்ள தொகையை, திட்ட செயல்பாடுகள் நன்றாக உள்ள மற்றும் திட்டங்களை செயல்படுத்த நிதி அதிகமாக தேவைப்படும் மாவட்டங்களுக்கு மறு ஒதுக்கீடு செய்து வழங்குவார்.

iii) அ) நமக்கு நாமே திட்டத்தின்கீழ் அரசு மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நிதி நமக்கு நாமே திட்டத்திற்கான வங்கி சேமிப்பு கணக்கில் வைக்கப்படவேண்டும்.

ஆ) மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்படும் எல்லா நன்கொடைகளும் "மாவட்ட ஆட்சித்தலைவரின் நமக்கு நாமே திட்டக் கணக்கு" என்ற பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவாக இருக்க வேண்டும். பெறப்பட்ட எல்லா நன்கொடைகளுக்கும் பற்றுச்சீட்டு வழங்க வேண்டும்.

இ) பணமாக பெறப்படும் நன்கொடைகளுக்கென தனியாக ஒரு பதிவேடு பராமரித்து வரவேண்டும். இந்த கணக்குகளையும், பதிவேட்டையும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பராமரித்து வரவேண்டும்.

ஈ) நிர்வாக அனுமதி வழங்கும் போதே நன்கொடை தொகை உட்பட 75 விழுக்காடு தொகையை உள்ளாட்சி மற்றும் தொடர்புடைய துறைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் விடுவிக்க வேண்டும். மீதமுள்ள தொகையை பயன்பாட்டு சான்றிதழ் (Utilisation Certificate) பெற்ற பிறகு விடுவிக்க வேண்டும்.

iv) ஏதாவது காரணத்தால், உத்தேசிக்கப்பட்ட பணி மேற்கொள்ளப்படாமலிருந்தால், பெறப்பட்ட நன்கொடையின் முழு தொகையையோ அல்லது ஒரு பகுதியையோ, நடைபெற்றுள்ள வேலை மற்றும் அதன் மதிப்புக்கு ஏற்ப, திருப்பி தர மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிடுவார். இதுபோன்ற நேர்வுகளில், பங்களிப்புத் தொகைக்கு வட்டி ஏதும் இன்றி தொகை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, பங்களிப்பு வழங்கியவருக்குத் திருப்பி அளிக்கப்பட வேண்டும்.

**9. தகவல், கல்வி மற்றும் தொடர்பு**

நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பு அம்சங்களையும் இத்திட்டத்தின் வெற்றிச் செயல்பாடுகள் குறித்தும் உள்ளூர் பத்திரிக்கை மற்றும் மின்னணு செய்தி சாதனங்கள் மூலம் வெளியிட தேவையான தகவல் ஒளிபரப்பு மற்றும் விளம்பரங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்திட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில், ஒரு விழுக்காடு தொகையை, தகவல் மற்றும் செய்தி சம்பந்தமான நடவடிக்கைகளுக்கும், இத்திட்டம் பற்றிய ஆவணங்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**10. சென்னை மாநகராட்சி**

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பதிலாக சென்னை மாநகராட்சி ஆணையர் நிறைவேற்றுவார். அதன்படி இத்திட்டத்தின் கீழ் பணிகளுக்கான நிர்வாக ஒப்புதல்களை சென்னை மாநகராட்சி ஆணையர் வழங்குவார்.

**11.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருடன் கலந்தாலோசித்து, நமக்கு நாமே திட்ட செயல்பாட்டிற்கான மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில், எதிர்காலத்தில் ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களை கருத்தில் கொண்டு, தேவையான மாற்றங்களை செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.